பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
04 01 2026 SUNDAY 6 45 AM
வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- குறித்த காலத்திற்குள் நீதி கிடைப்பதை 3 புதிய குற்றவியல் சட்டங்கள் உறுதி செய்யும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

- கல்வித்தரத்தை சர்வதேச தரத்திற்கு உயர்த்தும் வகையில், தேசிய கல்விக் கொள்கை அமைந்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

- போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளில் காவல்துறையினர் தனிக்கவனம் செலுத்த வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

- தமிழகத்தில் அனைத்து ஆயுஷ் மருத்துவமனைகளுக்கும் தேவையான மருந்துகள் வழக்கப்பட்டு வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

- தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான முதலாவது இளையோர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 25 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

>>>>><<<<<

2029ஆம் ஆண்டுக்குள் அமர்வு நீதிமன்றம் முதல் உச்சநீதிமன்றம் வரை காலமுறைப்படி நீதி கிடைப்பதை 3 புதிய குற்றவியல் சட்டங்கள் உறுதி செய்யும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

அந்தமான் நிகோபார் தீவுகளில் உள்ள ஸ்ரீவிஜயபுரத்தில் நேற்று நடைபெற்ற உள்துறை அமைச்சகத்தின் நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் பேசிய அவர், புதிய சட்டங்கள் விசாரணையை விரைவுபடுத்துவதோடு, குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத்தரும் விகிதத்தையும் அதிகரிக்கும் என்று தெரிவித்தார்.

ஐந்தாண்டுகளுக்கு முன்பு, நாட்டில் தடயவியல் ஆய்வகங்கள் ஏதுமில்லை என்றும், ஆனால் தற்போது இவற்றின் எண்ணிக்கை ஆயிரமாக அதிகரித்துள்ளது என்றும் அவர் கூறினார்.

நாடுமுழுவதும் தடயவியல் ஆய்வகங்களில் வலைஅமைப்பை உருவாக்க அடுத்த ஐந்தாண்டுகளில் 30 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

2029ஆம் ஆண்டுக்குள் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு தடயவியல் பல்கலைக்கழகம் அல்லது மத்திய தடயவியல் ஆய்வகம் அமைக்கப்படும் என்றும் திரு. அமித் ஷா உறுதியளித்தார்.

>>>>><<<<<

கல்வித்தரத்தை சர்வதேச தரத்திற்கு உயர்த்தும் வகையில், தேசிய கல்விக் கொள்கை அமைந்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்டம், குடியாத்தம் அருகே நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், கடந்த 11 ஆண்டுகளில் கல்வித்துறைக்கு மத்திய அரசு அதிக அளவில் நிதிஒதுக்கீடு செய்துள்ளதாக கூறினார்.

(சவுண்ட் பைட் - எல். முருகன் 53 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளில் காவல்துறையினர் தனிக்கவனம் செலுத்த வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக தேர்வு செய்யப்பட்ட 621 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 129 தீயணைப்புத் துறை நிலைய அலுவலர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி அவர் பேசினார்.

தமிழகம் பாதுகாப்பான அமைதியான மாநிலம் என்பதால் தான் அதிகமான நிறுவனங்கள் முதலீடுகள் செய்து வருவதாக கூறினார்.

காவலர்கள் தங்களுக்குள்ள கடமைகளை உணர்ந்து கவனமாகச் செயல்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்கும்போது, மிகவும் கவனமாக நடந்து கொள்ளவேண்டும் என்றும் முதலமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தில் அனைத்து ஆயுஷ் மருத்துவமனைகளுக்கும் தேவையான தரமான மருந்துகள் தடையின்றி வழங்கப்பட்டு வருவதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற சித்த மருத்துவ தின விழாவில் பேசிய அவர், கடந்த நான்காண்டுகளில் இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறையில், உதவி மருத்துவ அலுவலர், மருந்தாளுநர் மற்றும் மருத்துவ உதவியாளர் உள்ளிட்ட நிரந்தரப் பணியிடங்களுக்கு 439 நபர்கள் ஒப்பந்த அடிப்படையில் 565 நபர்கள் என ஆயிரத்து நான்கு நபர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர் என்று கூறினார்.

ஆயுர்வேதம், யோஹா, இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா, ஹோமியோபதி ஆகிய மருத்துவ பிரிவுகளின் திட்டம் மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்காக கடந்த ஐந்தாண்டுகளில் 239 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மக்களைத் தேடி மருத்துவம் – திட்டத்தின் மூலம் இல்லங்களுக்கே சென்று சித்த மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

>>>>><<<<<

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தங்களை மேற்கொள்வதற்கான சிறப்பு முகாம்கள் மாநிலம் முழுவதும் இன்றும் நடைபெறவுள்ளது.

தமிழகம் முழுவதும் 75 ஆயிரம் வாக்குச்சாவடிகளில் இந்த முகாம்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கடந்த 19ஆம் தேதி வெளியிட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் திருத்தங்களை மேற்கொள்ள விரும்புவோர் வரும் 18ஆம் தேதிக்குள் படிவங்களை அளிக்கலாம் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இறுதி வாக்காளர் பட்டியல் அடுத்த மாதம் 17ஆம் தேதி வெளியிடப்படவுள்ளது.

>>>>><<<<<

சென்னை பிராட்வே பேருந்து முனையம் மறுசீரமைக்கப்பட உள்ளதால், இம்மாதம் 7ஆம் தேதி முதல் செயல்படாது என்று சென்னை மாநகர போக்குவரத்துக் கழகம் அறிவித்துள்ளது.

தற்காலிகமாக பேருந்து நிலையம், ராயபுரம் மற்றும் தீவுத்திடல் பகுதியிலிருந்து செயல்படும் என்றும், அதற்காக அங்கு பேருந்து முனையம் கட்டப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்துக் கழக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராயபுரம் பேருந்து முனையத்திலிருந்து அண்ணாசாலை, ஈ.வெ.ரா. சாலை மற்றும் காமராஜர் சாலை வழியாக இயக்கப்படும் பேருந்துகள் புறப்படும் இடத்திலிருந்து ராயபுரம் நோக்கிச் செல்லும் போது, வடக்கு துறைமுக சாலையில், துறைமுகம் சட்டமன்ற உறுப்பினர்

அலுவலகம் அருகில் அமைந்துள்ள பேருந்து நிலையத்தில் பயணிகளை இறக்கி – ஏற்றி, ராயபுரம் பேருந்து முனையத்திற்கு செல்லும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காமராஜர் சாலை வழியாக இயக்கப்படும் பேருந்துகள், வடக்கு துறைமுக சாலையில், வலதுபுறம் திரும்பி, எஸ்பிளனேடு சாலையில் ராஜா அண்ணாமலை மன்றம் அருகில் உள்ள பேருந்து நிறுத்தத்தில் பயணிகளை இறக்கி, ஏற்றிச் செல்லும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

>>>>><<<<<

இருவரிச் செய்திகள்

அமெரிக்கா ராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ள வெனிசுலா அதிபர் திரு. நிகோலஸ் மதுரா மற்றும் அவரது மனைவி *Cilia Flores* ஆகியோர் நியூயார்க் அழைத்துச் செல்லப்பட்டனர்.

>>>>><<<<<

ஆப்கானிஸ்தானில் நள்ளிரவில் நிலநடுக்கம் ஏற்பட்டது, இது ரிக்டர் அளவில் 4 புள்ளி இரண்டாக பதிவாகியுள்ளது.

>>>>><<<<<

திரிபுராவில் 100 கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப்பொருட்களை பாதுகாப்புப் படையினர் கண்டுபிடித்து, அழித்தனர்.

>>>>><<<<<

பனிப்பொழிவை ரசிப்பதற்காக ஜம்மு கஷ்மீரில் உள்ள பஹல்காம். ஸ்ரீநகர் உள்ளிட்ட பகுதிகளுக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

>>>>><<<<<

தருமபுரி மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலில் புதிய வாக்காளர்கள் இணைய வேண்டிய அவசியத்தை வலியுறத்தும் விழிப்புணர்வு வாகனத்தை ஆட்சியர் திரு. சதிஷ் நேற்று தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

உதகை அருகே பலத்த காயத்துடன் சுற்றித்திரியும் புலியை பிடிக்கும் முயற்சியில் வனத்துறையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

>>>>><<<<<

*திருப்பூர் மாவட்டம், தாராபுரம் குப்பாறு அணையிலிருந்து பாசனத்திற்காக வலது கரை மற்றும் இடது கரை கால்வாய்களில் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.*

*>>>>><<<<<*

*புதுக்கோட்டை மாவட்டம். தச்சங்குறிச்சியில் நேற்று நடைபெற்ற ஜல்லிக்கட்டின் போது, மாடு முட்டியத்தில் 51 பேர் காயமடைந்தனர்.*

*>>>>><<<<<*

*காஞ்சிபுரம் கச்சபேஸ்வரர் திருக்கோவிலில் ஆருத்ரா தரிசன விழாவை முன்னிட்டு நேற்றிரவு நடைபெற்ற பொம்மலாட்ட கலைநிகழ்ச்சியை ஏராளமான குழந்தைகள் கண்டுகளித்தனர்.*

*>>>>><<<<<*

*சென்னை துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகள் குறித்து மாநகராட்சி அதிகாரிகளுடன் அமைச்சர் திரு. சேகர்பாபு நேற்று ஆலோசனை நடத்தினார்.*

*>>>>><<<<<*

*சென்னை கடற்கரை - தாம்பரம் - செங்கல்பட்டு இடையே இயக்கப்படும் குளிர்சாதன வசதி கொண்ட மின்சார ரயில்களின் நேரத்தில் நாளை முதல் மாற்றம் செய்யப்பட உள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.*

*>>>>><<<<<*

*விளையாட்டுச் செய்திகள்*

*தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான முதலாவது இளையோர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 25 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.*

*Benoni-யில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய இந்தியா. நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 301 ரன் எடுத்தது.*

*302 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய தென்னாப்பிரிக்க அணி, 27 புள்ளி நான்கு ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 148 ரன் எடுத்திருந்த நிலையில், மழை குறுக்கிட்டதால், ஆட்டத்தை தொடர முடியவில்லை.*

*இதனால், டக் வொர்த் லிவிஸ் முறையில் இந்தியா வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.*

*>>>>><<<<<*

*ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் தமிழக அணி 4-2 என்ற கோல்கணக்கில் ஹைதராபாத் அணியை வென்றது.*

*சென்னையில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் இரு அணிகளும் தலா 3 கோல் போட்டு சமநிலையில் இருந்ததால், ஆட்டத்தின் வெற்றி தோல்வியை தீர்மானிக்க, பெனால்டி முறை கடைபிடிக்கப்பட்டது. இதில் தமிழக அணி 4 கோலும், ஹைதராபாத் அணி 2 கோலும் அடித்தன.*

*இன்று மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில், சூர்மா அணி பெங்கால் அணியை எதிர்கொள்கிறது.*

*இரவு 7.30-மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் கலிங்கா அணி – ராஞ்சி அணியை எதிர்கொள்ளவுள்ளது.*

*ராஞ்சியில் நேற்று நடைபெற்ற மகளிர் பிரிவு ஆட்டத்தில், SG Pipers அணி 3-1 என்ற கோல்கணக்கில் சூர்மா அணியை வென்றது.*

*இன்று மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் ராஞ்சி அணி பெங்கால் அணியை எதிர்கொள்கிறது.*

*>>>>><<<<<*

*சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியின் மகளிர் பிரிவில் சின்ட்ரல்லா தாஸூம், ஆடவர் பிரிவில் ரூபம் சர்தாரும் பட்டம் வென்றனர்.*

*வடோதராவில் நேற்று நடைபெற்ற மகளிர் பிரிவு இறுதியாட்டத்தில் சின்ட்ரல்லா தாஸ் 11-3, 9-11, 11-9, 11-9 என்ற செட்கணக்கில் ஹன்சினி மதனை வென்றார்.*

*ஆடவர் பிரிவில் ரூபம் சர்தார் 11-8, 6-11, 11-5, 11-3 என்ற செட்கணக்கில் சோகம் முகர்ஜியை வென்றார்.*

*>>>>><<<<<*

*72வது தேசிய வாலிபால் போட்டிகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று காணொலி வாயிலாக தொடங்கி வைக்கிறார்.*

*>>>>>END<<<<<*